# பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை
# ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
# Chief Secretary's Secretariat, Northern Provincial Council

மாகாணசபை வளாகம், A9 வீதி, கைதடி
පළාත් සභාව සංකීර්ණය, A9 පාර, කයිතඩි
**Provincial Council Complex , A9 Road, Kaithady**

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com


MY NO: NP/09/AP/4/CIR/16/2018 2018.04.10

மாகாண ஆதன முகாமைத்துவ சுற்று நிருப இல : **PF/AP/CIR/AST/01/2018**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**அரசாங்கத்தின் நிதி சாரா ஆதன முகாமைத்துவம் – பயன்படுத்த முடியாத மோட்டார் வாகனங்களை அகற்றுதல்**

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் 2018 மார்ச் 19 ஆம் திகதிய 01/2018 இலக்க சுற்றுநிருபத்தின் பால் **(பிரதி இணைக்கப்பட்டுள்ளது)** தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

அதில் குறிப்பிடப்பட்டவாறு 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 இலக்க அரச நிதி சுற்றுநிருபத்தினை **(பிரதி இணைக்கப்பட்டுள்ளது)** பின்பற்றி பயன்படுத்த முடியாத அனைத்து மோட்டார் வாகனங்களையும் 2018 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் அகற்றுதல் வேண்டும்.

எனவே தங்கள் நிறுவனத்தில் காணப்படும் குறித்த வாகனங்கள் தொடர்பான விபரங்கள், இணைப்பு I இற்கு அமைவாக பூரணப்படுத்தப்பட்டு எதிர்வரும் 2018 ஏப்ரல் 23 ஆந் திகதிக்கு முன்னர் மாகாணத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மேலும் குறித்த விபரங்கள் ஏற்கனவே தங்களால் கொம்ப்ரோலர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட இற்றைப்படுத்தப்பட்ட விபரங்களுடன் ஒத்துப் போதல் வேண்டும்.

எஸ்.யு.சந்திரகுமாரன்
பிரதிப் பிரதம செயலாளர் – நிதி,
வட மாகாணம்

ஒப்பம்
அ.பத்திநாதன்
பிரதம செயலாளர்,

பிரதி :

1. கௌரவ ஆளுநரின் செயலாளர், ஆளுநர் செயலாளர், வ.மா
2. கொம்ப்ரோலர் நாயகம், கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகம், கொழும்பு
3. பிரதிக் கணக்காய்வாளர் நாயகம், பிரதிக் கணக்காய்வாளர் அலுவலகம், வ.மா
4. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், உள்ளகக் கணக்காய்வாளர் அலுவலகம், வ.மா
5. ஆணையாளர், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், வ.மா


பிரதிப் பிரதம செயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
DEPUTY CHIEF SECRETARY

நிர்வாகம் / පරිපාලන / ADMINISTRATION — Tel : 021 320 2571 (Dir) : 021 222 0960 (Gen) Fax : 021 222 0950 e-mail : ppas.np@gmail.com

நிதி / මුදල් / FINANCE — Tel : 021 222 0850 (Dir) : 021 222 0854 (Gen) Fax : 021 222 0853 e-mail : nptreasury@gmail.com

திட்டமிடல் / කුමසම්පාදන / PLANNING — Tel : 021 223 0355 ( : 021 223 0451 ( Fax : 021 223 0354 e-mail : npplan@sltne

ஆளணிப்பயிற்சி / පිරිස්පුහුණු / PERSONNEL TRAINING — Tel : 021 739 1250 (Dir) : 021 739 1254 (Gen) Fax : 021 739 1257 e-mail : npmdti@gmail.com

பிரதமஉள்ளககணக்காய்வாளர் / ප්‍රධානඅභ්‍යන්තරවිගණක / CHIEF INTERNAL AUDITOR — Tel : 021 222 0796 (Dir) : 021 222 9528 (Gen) Fax : 021 222 0796 e-mail : npcaudit@yahoo.com

Annexure I

# Vehicle detail as at 31.12.2017

## Northern Province

Ministry : ..........................................................................................................................................

Department : ..........................................................................................................................................

| SNo | Vehicle Number | Type of Motor Vehicle | Make / Model | * Purchase Price | * Purchase Year | Engine Capacity | * Total Running Mileage | Other Details |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

* - Optional

Prepared By : ..............................................................

..............................................................

Checked By : ..............................................................

Head of Department

මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
**MINISTRY OF FINANCE AND MASS MEDIA**

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය - මුදල් / அலுவலகம் - நிதி / Office - Finance: (+94)-11-2484500, (+94)-11-2484600, (+94)-11-2484700
ෆැක්ස් - මුදල් / பெக்ஸ் - நிதி / Fax - Finance: (+94)-11-2449823
වෙබ් අඩවි / வெப் சைட்கள் / Websites: www.treasury.gov.lk, www.media.gov.lk
කාර්යාලය - ජනමාධ්‍ය / அலுவலகம் - வெகுசன ஊடக / Office - Mass Media: (+94)-11-2513459, (+94)-11-2513498, (+94)-11-2512324
ෆැක්ස් - ජනමාධ්‍ය / பெக்ஸ் - வெகுசன ஊடக / Fax - Mass Media: (+94)-11-2513458

මගේ අංකය / எனது இல. / My No. CGO/ASM/Policy/Cir/01
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2018.03.19

**ஆதன முகாமைத்துவ சுற்றுநிருப இல: 01/2018**

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள், அரச வங்கிகள் மற்றும் அரசாங்க உடைமைக் கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்,

**அரசாங்கத்தின் நிதிசாரா ஆதன முகாமைத்துவம் - பயன்படுத்த முடியாத மோட்டார் வாகனங்களை அகற்றுதல்**

2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் கீழ் அறிக்கையிடுவதற்கு தேவைப்படுத்தப்பட்டவாறு மத்திய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரச தொழில் முயற்சிகளினால் கொம்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் பற்றிய தகவல்களைக் கவனத்திற் கொண்டு 2018 சனவரி 02 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவையில் பயன்படுத்தப்பட முடியாத 7,723 மோட்டார் வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு உரிய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

02) இதற்கமைவாக; அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களை அகற்றுவதற்கு 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றுநிருபத்தின் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும் பயன்படுத்தப்படாத நிலைமையில் 7,723 மோட்டார் வாகனங்கள் காணப்படுகின்றமை திருப்திகரமான ஒரு விடயமல்ல என்ற வகையில் அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள் அனைவரும் கீழே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அ) 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி பயன்படுத்தப்பட முடியாத அனைத்து மோட்டார் வாகனங்களையும் 2018 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் அகற்றுதல்.

ஆ) மத்திய அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான அத்தகைய மோட்டார் வாகனங்களை அகற்றுவதன் மூலம் பெறப்படும் அனைத்து வருமானங்களையும் திரட்டிய நிதியத்தில் வைப்பிலிடுதல். அத்துடன் வரவு செலவுத்திட்ட நிதி ஏற்பாட்டின் மூலம் நிதியளிக்கப்பட்ட ஏனைய அரசாங்க நிறுவனங்களின் அத்தகைய வருமானங்களும் திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

இ) மேற்குறித்த அகற்றல் செயன்முறை நிறைவுற்றதன் பின்னர் 2018 யூலை 30 ஆந் திகதிக்கு முன்னர் கொம்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03) அரசாங்க சொத்துக்களை முகாமை செய்வது மிகவும் முன்னுரிமை வழங்கப்படவேண்டிய விடயம் என்ற வகையில் அரசாங்க நிறுவனங்கள் அனைத்தும் மேற்குறித்த அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன், மேலதிக தெளிவுபடுத்தல்களுக்கு தயவு செய்து கொம்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தினை தொடர்பு கொள்ளவும்.

கொம்ரோலர் நாயகம்,
கொம்ரோலர் நாயகத்தின் அலுவலகம்,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
செயலகக் கட்டிடம்
கொழும்பு - 01

தொலைபேசி இல : 011 - 2151425
தொலைநகல் இல : 011 - 2151417

**ஒப்பம்: ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**

**திறைசேரி செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. மோட்டார் வாகன ஆணையாளர் நாயகம்
6. தேசிய வரவுசெலவுத்திட்ட பணிப்பாளர் நாயகம்
7. பொது நிதி பணிப்பாளர் நாயகம்
8. பொது தொழில்முயற்சிகள் பணிப்பாளர் நாயகம்
9. திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம்
10. அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம்

මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
# MINISTRY OF FINANCE



මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: PFD/ASD/02/Veh.Circular 2015
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2015.07.10

அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம்:- 02/2015

அமைச்சுக்களின் செயலாளர்கள்,

மாகாண பிரதம செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்,

அரசாங்க நியதிச் சட்டமுறைச் சபைகளின் தலைவர்கள் யாவருக்கும்,

**அரசாங்க நிறுவனங்களிலுள்ள பழுதடைந்த வாகனங்களை பாவனையிலிருந்து அகற்றுதல்**

**2015 ஆம் ஆண்டுக்காக திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவு வருமான முன்மொழிவு 8.51 இன் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான பழுதடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதன் பிரகாரம் இந்த விடயமானது உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டியிருக்கின்ற முக்கியமான பணியொன்றாக அடையாளங் கண்டு நிதிப் பிரமாணங்கள் மற்றும் பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைவாக அரசாங்க நிறுவனங்களிலுள்ள பழுதடைந்த வாகனங்களை அகற்றுவது சம்பந்தமான அறிவுறுத்தல்களையும் முறைமைகளையும் விளக்கும் நோக்கில் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.**

**02.** இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அகற்றப்பட வேண்டும் என அடையாளங் காணப்படுகின்ற வாகனங்களை, இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் அகற்றி முடிவுறுத்துவது சகல பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும்/ கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். இந்தச் சுற்றறிக்கையின் கீழ் அகற்றுவதற்காக அடையாளங் காணப்படுகின்ற வாகனங்கள் என்பதற்கு இதன் 04 ஆம் பந்தியின் கீழ் அடையாளங் காணப்படுகின்ற மோட்டார் வாகனங்கள், பேருந்து, புகையிரதம் (புகையிரதப் பெட்டிகள், புகையிரத என்ஜின்கள்), லொறி வண்டி, அம்பியூலன்ஸ், ட்ரக்டர், ட்ரேலர், நில வாகனங்கள் உட்பட ஏனைய சகல வாகனங்களும் ஏற்புடையதாகும்.

**03. அகற்றப்பட வேண்டிய வாகனங்களை அடையாளங் காணுவதற்கான விசேட ஆய்வுச் சபை**

"அரசாங்க செலவின முகாமைத்துவம் - 2015 ஆம் நிதியாண்டு" எனும் தலைப்பில் 2015.03.31 ஆம் திகதிய தேசிய வரவு செலவுச் சுற்றறிக்கை இலக்கம் 2/2015 இல் 07 ஆம் பந்தியின் கீழ் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் அகற்றப்பட்ட வேண்டிய வாகனங்களை அடையாளங் காணுவதற்கான விசேட ஆய்வுச் சபை/ சபைகள் நியமிக்கப்படுதல் வேண்டும். அதன் இணைப்பாக்கம் பின்வருமாறு.

I. தலைவர்/ சிரேட்ட பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர்

II. இயந்திரப் பொறியியலாளர் ஒருவர் / தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர்

III. நிறுவனத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக பொறுப்பு வகிக்கின்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர்

**04. அகற்றப்பட வேண்டிய வாகனங்களை அடையாளங் காணுதல் மற்றும் விலைமதிப்பீடு செய்தல்**

(அ) மேலே 03 ஆம் பந்தியின் பிரகாரம் அகற்றப்படுகின்ற வாகனங்களை அடையாளங் காணுவதற்காக நியமிக்கப்பட்ட விசேட ஆய்வுக் சபையினால் நிறுவனங்களிலுள்ள வாகனங்களை பின்வரும் வகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டிய அதேவேளையில் தொழில்நுட்ப அறிக்கையின் மூலம் அந்தந்த வகுதியின் கீழ் விற்பனை செய்யப்பட வேண்டிய வாகனங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

I. வகுதி :- சிதைவுகளாகக் காணப்படுகின்ற வாகனங்கள்

II. வகுதி :- ஓடக்கூடிய நிலையில் இல்லாததும் பழுதுபார்த்தலானது பொருளாதார ரீதியில் பயனற்றதுமான வாகனங்கள்

III. வகுதி :- ஓடக்கூடிய நிலையில் காணப்படுகின்ற ஆனால் பயன்பாடு பொருளாதார ரீதியில் பயனற்றதுமான வாகனங்கள் மற்றும் ஏனைய விசேட காரணிகளின் அடிப்படையில் அகற்றுவதற்காக அடையாளங் காணப்பட்ட வாகனங்கள்

(ஆ) இந்தச் சுற்றறிக்கையின் கீழ் அகற்றப்பட வேண்டியவை பதிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து 10 வருடங்களைத் தாண்டிய வாகனங்கள் மாத்திரமேயாகும். எவ்வாறாயினும், மேலே 04 ஆம் பந்தியின் "அ" இல் வகுதி I இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட வாகனங்கள் சம்பந்தமாக இந்த 10 வருட எல்லை ஏற்புடையதாகாது. மேலும், மேலே 04 ஆம் பந்தியின் "அ" இல் வகுதி II மற்றும் III ஆகியவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட 10 வருடங்களைத் தாண்டாத வாகனங்களை விற்பனை செய்தல் வேண்டும் என மேலே 03 ஆம் பந்தியின் பிரகாரம் நியமிக்கப்பட்ட விசேட ஆய்வுச் சபை பரிந்துரை

செய்யுமாயின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அகற்றப்படலாம்.

(இ) தேசிய வரவு செலவுச் சுற்றறிக்கை இலக்கம் 2/2015 இல் 07 ஆம் பந்தியின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாதிரி இலக்கம் 01 இன் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்திற்கு இது வரையில் வாகனங்களை அகற்றுவது சம்பந்தமான தகவல்களைச் சமர்ப்பிக்காத நிறுவனங்களினால் 2015.07.31 ஆம் திகதிக்கு முன்னர் அந்தத் தகவல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஏதேனும் நிறுவனமொன்றில் அகற்றப்பட வேண்டிய வாகனங்கள் இல்லையாயின் அது பற்றியும் உரிய திகதிக்கு முன்னர் அரச நிதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அறிக்கையிட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

**05. அகற்றப்பட வேண்டிய வாகனங்களை விலைமதிப்பீடு செய்வதற்கான சபை**

அகற்றப்பட வேண்டிய வாகனங்களை விலைமதிப்பீடு செய்து, அவற்றின் குறைந்தபட்ச விற்பனை விலையைத் தீர்மானிப்பதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் / கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் சபையொன்றை நியமித்தல் வேண்டும். ஆகக் குறைந்தது மூவரைக் கொண்டதாக இருக்க வேண்டிய இந்தக் குழு பின்வரும் I,II மற்றும் III இல் காட்டப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் கட்டாயமாக உள்ளடங்கியிருக்க வேண்டிய அதேவேளையில் தேவையான போது IV இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை உள்ளடக்கி உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஆகக் கூடியது 5 வரை அதிகரித்துக் கொள்ள முடியும்.

I. தலைவர் - சிரேட்ட பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் (நாடளாவிய சேவையொன்றில் வகுப்பு I ஐச் சேர்ந்த அலுவலர் ஒருவர் அரசாங்க தொழில்முயற்சியாளர்களாயின் சிரேட்ட பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர்)

II. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மோட்டார் வாகனப் பரீட்சகர் ஒருவர்

III. இயந்திரப் பொறியியலாளர் ஒருவர் / தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர்

IV. தேவைக்கு ஏற்றவிதத்தில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நியமிக்கப்படுகின்ற ஏனைய இரு அலுவலர்கள்

**06. வாகனங்களை அகற்றுதல்**

(அ) மேலே 04 ஆம் பந்தியின் பிரகாரம் அடையாளங் காணப்பட்டுள்ள வாகனங்களை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு திறந்த விலைமனுக் கோரலின் மூலமே விற்பனை செய்தல் வேண்டும். இது சம்பந்தமாக கொள்வனவு செய்வதற்காக அமைச்சு மற்றும் திணைக்களங்களின் பெறுகைக் குழுவினால்

நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ரூபா 50 மில்லியன் வரையான பெறுமதியைக் கொண்ட விற்பனைகள் சம்பந்தமாக திணைக்களங்களின் பெறுகைக் குழுவினால் நடவடிக்கை எடுக்க வேண்டிய அதேவேளையில், அந்தப் பெறுமதியை தாண்டுகின்ற விற்பனைகள் சம்பந்தமாக அமைச்சின் பெறுகைக் குழுவினாலேயே நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் திறந்த விலைமனுக் கோரலைக் கோரி விற்பனை செய்வது கடினமாக இருக்கக் கூடிய சந்தர்ப்பங்களில் மாத்திரம் அரசாங்கத்திற்கு நிதிரீதியான நட்டம் ஏற்படாத விதத்தில் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் தீர்மானிக்க முடியும்.

(ஆ) மேலே 04 ஆம் பந்தியின் பிரகாரம் நியமிக்கப்பட்ட விசேட ஆய்வுச் சபையின் பரிந்துரைகளைக் கவனத்திலெடுத்து நிறுவனத்தின் சாதாரண கடமைகளுக்குத் தேவையான வாகனத் தொகுதிக்கு தடை ஏற்படாத விதத்தில் மேலே 04 ஆம் பந்தியின் பிரகாரம் அடையாளங் காணப்பட்டுள்ள வாகனங்களை அகற்றுதல் வேண்டும். அகற்றுதல் சம்பந்தமான இறுதித் தீர்மானத்தை எடுக்க வேண்டியது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரே ஆவார். எவ்வாறாயினும் அரசாங்க தொழில்முயற்சிகளின் வாகனங்கள் சம்பந்தமானதாக இருப்பின் பணிப்பாளர் சபையின் பரிந்துரையைக் கொண்டதாக அந்தக் கோரிக்கை நிரல் அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்பி இறுதித் தீர்மானத்தை எடுத்தல் வேண்டும்.

**07. அகற்றும் வாகனங்களை அடையாளங் காணுவதற்காக நியமிக்கப்படுகின்ற விசேட ஆய்வுச் சபை மற்றும் விலைமதிப்பீட்டுச் சபைக்குச் செய்கின்ற கொடுப்பனவு**

இந்தப் பணிக்காக நியமிக்கப்படுகின்ற விசேட ஆய்வுச் சபை மற்றும் வாகனங்களை விலைமதிப்பீடு செய்யும் சபையின் உறுப்பினர்களுக்கு செலுத்துவதற்குரிய கட்டணம் கீழே காட்டப்பட்டுள்ளது. தொடர்புடைய நிறுவனங்களினால் இந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

| **தொடர் இல.** | **வாகன வகுப்பு (2009 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கத்தின் மூலம் திருத்தப்பட்ட மோட்டார் வாகனச் சட்டத்தின் 122 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள விதமாக)** | **ஒரு வாகனத்திற்கு ஓர் உறுப்பினருக்காக (ரூபா)** | |
|---|---|---|---|
| | | **வகுதி I** | **வகுதி II,III** |
| 01 | இலகு மோட்டார் சைக்கிள் -ஏ 1<br>மோட்டார் சைக்கிள் -ஏ<br>மோட்டார் ட்ரைசிக்கிள் அல்லது மோட்டார் ட்ரைசிக்கிள் வான் - பீ 1 | 100/= | 250/= |

| | | | |
|---|---|---|---|
| 02 | இரட்டைப் பணி வாகனம் மற்றும் சகல மோட்டார் கார் வாகனம் - பீ<br>இலகு மோட்டார் லொறி - சீ1<br>கை ட்ரக்டர்- ஜீ1<br>விவசாயக் காணி வாகனம் - ஜீ<br>மோட்டார் லொறி - சீ<br>கனரக மோட்டார் லொறி – சீஇ<br>மோட்டார் கோச் - டீ<br>கனரக மோட்டார் கோச் - டீஇ<br>விசேட பணி வாகனம் (நிர்மாணிப்புக்காக பயன்படுத்தப்படுகின்ற) - ஜே | 200/= | 500/= |

**08. ஏலமிடுபவர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளுதல்.**

நிறுவனமொன்றுக்கு அகற்றப்பட வேண்டிய வாகனங்களின் எண்ணிக்கை 50 ஐத் தாண்டுகின்ற சந்தர்ப்பத்திலும் வாகனங்களின் அகற்றுவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ள ஏலமிடுபவர்களின் சேவை அவசியமானது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தனிப்பட்ட ரீதியில் உறுதிப்படுத்துவதாயின் மாத்திரம் பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் அதற்காக பொருத்தமான அத்தகைய ஏலமிடுபவர் ஒருவரைத் தெரிவு செய்து வாகனங்களை அகற்றும் நடவடிக்கையினை மேற்கொள்ள முடியும்.

**09. வாகனங்களை அகற்றுதல் பற்றிய பொதுவான அறிவுரை**

(அ) ஏதேனும் வாகனத்தின் பதிவு உரிமை நிறுவனத்தின் பெயரில் இல்லாத சந்தர்ப்பத்தில் அவ்வாறான வாகனங்களின் உரிமையை நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்த பின்னர் மாத்திரமே அகற்றுதல் நடவடிக்கைகளுக்கு உள்ளடக்குதல் வேண்டும்.

(ஆ) தீர்வையற்ற அல்லது ஏனைய விசேட நிபந்தனைகளின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களாயின், அந்த நிபந்தனைகளை உரிய விதத்தில் இரத்துச் செய்த பின்னர் மாத்திரமே தொடர்புடைய அகற்றல் நடவடிக்கைகளுக்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கின்ற அதேவேளையில், அவ்வாறு தீர்வையின்றி இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை பெறுகின்ற தரப்பினரினால் அதற்குரிய தீர்வை வரியைச் செலுத்துதல் வேண்டும் என அகற்றுதல் அறிவித்தல்களில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(இ) சிதைவுகளாக்கி அகற்றுவதற்கு அடையாளங் காணப்படுகின்ற வாகனங்களை அகற்றுவதற்கு முன்னர் அந்த வாகனங்களின் பதிவை இரத்துச் செய்வதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அவர்களின் மூலம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ) அகற்றுதல் நடவடிக்கைகளின் இறுதியில் இந்த வாகனங்களை கொள்வனவு செய்கின்ற வெளித் தரப்பினருக்கு இடையூறின்றி வாகனத்தின் உரிமையை மாற்றுவது தொடர்புடைய வாகனங்களை அகற்றுகின்ற நிறுவனத் தலைவரின் பொறுப்பாக இருக்கின்ற அதேவேளையில் அகற்றுகின்ற திகதி வரையில் தொடர்புடைய வாகனங்களுக்கு வருமான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(உ) வாகனத்தின் சட்டரீதியான உரிமையை வகிக்கின்ற நிறுவனம் ஏற்கனவே மூடப்பட்டிருப்பின் அந்த நிறுவனத்தை மூடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனத்தினால் வாகனத்தை உரிமை மாற்றுவது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மூடுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனம் உறுதியற்றதாகவுள்ள சந்தர்ப்பத்தில் தற்போது வாகனத்தைப் பயன்படுத்தும் உரிமையைக் கொண்டுள்ள நிறுவனத்திற்குரிய அமைச்சினால் உரிமை மாற்றுவது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஊ) அகற்றுவதற்கு அடையாளங் காணப்படுகின்ற வாகனங்களை விலைமதிப்பீடு செய்த பின்னர் மேற்சொன்ன வாகனங்களின் பாதுகாப்பு சம்பந்தமாக விசேட வேலைத் திட்டங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். அதன்போது நிறுவனத் தலைவரினால் அதன் பொருட்டு பொறுப்புக் கூறக் கூடிய உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து அதன் உறுதியான பொறுப்பை அவருக்கு வழங்குவது பொருத்தமானதாகும்.

(எ) அகற்றப்படுகின்ற வாகனத்தின் உரிமை தொடர்பில் தொடர்ந்தும் உறுதியற்றதாகவுள்ள சந்தர்ப்பத்தில் அது சம்பந்தமாக மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின்/ அரச நிதித் திணைக்களத்தின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு அடுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ஏ) திறந்த சந்தையில் விற்பது பொருத்தமில்லாத அதாவது விசேட பாதுகாப்பு, குண்டு துளைக்காத போன்ற விசேட வசதிகளைக் கொண்ட வாகனங்கள் பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையின் கீழ் விற்பனை செய்தல் வேண்டும்.

(ஐ) வாகன விற்பனை நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக வாகனப் போக்குவரத்து திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் ஆகியன தேவையான சந்தர்ப்பத்தில் ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும்.

(ஓ) வாகனம் அகற்றப்பட்ட திகதியிலிருந்து ஒரு வார காலத்தினுள் இந்த வாகனங்களை உரிய வளாகத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு கொள்வனவு செய்கின்ற தரப்பினருக்கு அறிவித்தல் வேண்டும்.

**10. வாகனத்தை உரிமை மாற்றுதல் மற்றும் விற்பனை வருமானம் பற்றிய அறிவுரை**

மொத்தத் தொகையையும் அறவிட்ட பின்னரே வெற்றிகரமான விலைகூறுவோருக்கு வாகனங்களை வழங்க வேண்டியிருப்பதுடன் இந்த நடவடிக்கையின் கீழ் சகல வருமானங்களும் உரிய விதத்தில் திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்தல் வேண்டும். அதேபோன்று இந்தப் பணிகள் முடிவடைந்த பின்னர் அது பற்றிய விபரமான அறிக்கையொன்றை மாதிரி இலக்கம் 02 இன் பிரகாரம் அரச நிதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு 2015.11.15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். அதன் பிரதிகள் அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம் மற்றும் கணக்காய்வாளர் நாயகம் ஆகியோருக்கு அனுப்ப வேண்டிய அதேவேளையில் அரச தொழில்முயற்சியாயின் அரச தொழில்முயற்சிப் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும் பிரதியொன்றை அனுப்புதல் வேண்டும்.

**11.** இந்தச் சுற்றறிக்கையின் கீழ் அகற்றப்படுகின்ற வாகனத்தின் பதிலீட்டுக்காக புதிய வாகனங்கள் வழங்கப்படமாட்டாது.

**12.** இந்தச் சுற்றறிக்கையின் அறிவுரையின் பிரகாரம் அகற்றல் நடவடிக்கைகள் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளுதல் வேண்டும். இதன் பின்னர் ஒவ்வொரு வருடத்திற்கு ஒருமுறையும் இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வாகன அகற்றுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இதன்போது அகற்றப்பட வேண்டிய வாகனங்களை அடையாளங்கண்டு அது பற்றிய தகவல்களை தொடர்புடைய வருடத்தின் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னரும் அகற்றுதல் நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் அது பற்றிய தகவல்களை தொடர்புடைய வருடத்தின் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னரும் முறையே மாதிரி இலக்கம் 01 மற்றும் மாதிரி இலக்கம் 02 இன் பிரகாரம் உரிய விதத்தில் பூர்த்தி செய்து அரச நிதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம், அரச தொழில்முயற்சிப் பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம், கணக்காய்வாளர் நாயகம் ஆகியோருக்கு அனுப்புதல் வேண்டும்.

**13.** 2015.07.15 ஆம் திகதி முதல் செயல்வலுப் பெறத்தக்கதாக இந்தச் சுற்றிக்கை வெளியிடப்படுகின்றது. இந்த வி`_யம் சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள பின்வரும் அரச நிதிச் சுற்றிக்கைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

i. 1997/09/30 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றிக்கை இலக்கம் 353
ii. 1997/12/31 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றிக்கை இலக்கம் 353(1)
iii. 1998/05/07 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றிக்கை இலக்கம் 353(2)
iv. 1998/11/27 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றிக்கை இலக்கம் 353(3)
v. 1999/11/03 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றிக்கை இலக்கம் 353(4)
vi. 2003/01/03 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றிக்கை இலக்கம் 353(5)
vii. 2004/08/31 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றிக்கை இலக்கம் 353(5)

**14.** இந்தச் சுற்றிக்கையானது பொதுத் திறைசேரியின் வலைத் தளங்களிலிருந்து (www.treasury.gov.lk) பதிவிறக்கம் செய்ய முடியம். சுற்றிக்கை சம்பந்தமான ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படுமாயின் 001-2484614 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் அரச நிதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

ஒப்பம்: ஆர்.எச்.எஸ்.சமரதுங்க
திறைசேரியின் செயலாளர் மற்றும்
நிதி அமைச்சின் செயலாளர்

பிரதி:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம்
6. சுங்கப் பணிப்பாளர் நாயகம்
7. உள்நாட்டு இறைவரி ஆணையாளர்
8. தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம்
9. அரச தொழில்முயற்சிப் பணிப்பாளர் நாயகம்
10. திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம்,
11. அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம்

} தகவலுக்காகவும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும்